DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No.240/2024

Deposition of Witness : LW1/PW4

| Name | வடிவேலு | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | ராமநாதன் | Village | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **23.06.2025.** | | | |

( Accused present)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:</u>**

1. நான் முதல் விசாரணையில் சமூகம் நீதிமன்றத்தில் சொன்னதுபோல் இவ்வழக்கு விபத்து சம்பந்தமாக கடலூரில் அமைந்துளள தனியார் மருத்துவமனையான B WELL மருத்துவமனையில் எனது மகன் சங்கருக்கு இவ்வழக்கு விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு எலும்பு முறிவு மேல் சிகிச்சை பெற்றது சம்மந்தமான மேற்படி மருத்துவமனையின் கீழ்க்கண்ட மருத்துவ ஆவணங்கள், நுண்கதிர் படங்கள் ஆகியவற்றை சமூகம் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். மேற்படி மருத்துவ ஆவணங்கள் மற்றும் நுண்கதிர் படங்களை சமூகம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

2. என் மகன் சங்கருக்கு மேற்படி மருத்துவமனையில் 23.07.2023 அன்று என் மகன் சங்கருக்கு CUD 3876 எடுக்கப்பட்ட நுண்கதிர் படங்கள் LEG AP/LAT - 1, PELVIC AP-1, SHOULDER AP-1, FOORT AT -1, CHEST AP - 1, FEMUR AP/LAT - 1, R.FEMUR AP / LAT-1 சமூகம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். **(மேற்படி நுண்கதிர் படங்கள்-7 எண்ணிக்கைகள் அசல் அ.சா.ஆ 3 (வரிசை)ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. என் மகன் சங்கருக்கு மேற்படி மருத்துவமனையில் 15.09.2023 அன்று என் மகன் சங்கருக்கு CUD 3876 எடுக்கப்பட்ட நுண்கதிர் படம் R.FEMUR AP / LAT -1 சமூகம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். **(மேற்படி நுண்கதிர் படம் அசல் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. என் மகன் சங்கருக்கு மேற்படி மருத்துவமனையில் 06.10.2023 அன்று என் மகன் சங்கருக்கு CUD 3876 எடுக்கப்பட்ட நுண்கதிர் படம் R.FEMUR AP / LAT -1 சமூகம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். **(மேற்படி நுண்கதிர் படம் அசல் அ.சா.ஆ 5 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.)**

5. என் மகன் சங்கருக்கு மேற்படி மருத்துவமனையில் 24.10.2023 அன்று என் மகன் சங்கருக்கு CUD 3876 எடுக்கப்பட்ட நுண்கதிர் படம் R.FEMUR AP / LAT -1 சமூகம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். **(மேற்படி நுண்கதிர் படம் அசல் அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (மேற்படி நுண்கதிர் படங்கள் அ.சா.ஆ 3 (வரிசை) முதல் அ-சா.ஆ 6 வரையிலான ஆவணங்கள் இவ்வழக்கிற்கு சம்பந்தமற்றவை என்றும், மேற்படி ஆவணங்கள் மருத்துவர் மூலமாக மட்டுமே குறியீடு செய்யவேண்டுமே தவிர, இந்த சாட்சி PW4-ஆல் குறியீடு செய்ய இயலாது என்று எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவித்ததன்பேரில் மேற்படி ஆவணங்கள் எதிரி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.)**

6. மேற்படி மருத்துவமனையில் எனது மகன் சங்கருக்கு வழக்கு விபத்தில் வலது காலில் ஏற்பட்ட எலும்பு முறிவு சம்பந்தமாக அளிக்கப்பட்ட மருத்துவ ஆவணங்கள் அசலுடன் நகலையும் சமூகம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேற்படி மருத்துவ ஆவணங்களின் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு வழக்கு கோப்பில் சேர்க்கப்பட்டு சமூகம் நீதிமன்றத்தில் உள்ளது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. எனது மகன் விபத்தில் அடிப்பட்ட தேதியானது 23.07.2023 ஆகும். நான் எனது மகனை விபத்திற்கு பிறகு எப்போது பார்த்தேன் என்றால் பண்ருட்டி G.H.-ல் 23.07.2023 அன்று இரவு 08.00 மணிக்கு பார்த்தேன். எனக்கு இவ்வழக்கு விபத்து தொடர்பாக நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் இவ்வழக்கு விபத்து தொடர்பாக காவல் நிலையம் சென்று புகார் அளித்தது எப்போது என்றால் 24.07.2023 அன்று ஆகும். எனது மகன் காதலித்த பெண் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, எனது மகன் யாரையும் காதலிக்கவில்லை. எனது மகன் தற்கொலை செய்துதான் இறந்தார் என்றால் சரிதான். எனது மகன் தற்கொலை செய்துகொண்டு இறந்ததை ஆதரவாக கொண்டு இவ்வழக்கிற்கு சாதகமாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு விபத்து பற்றி நேரடியாக எதுவும் எனக்கு தெரியாததனால் இவ்வழக்கிற்காக பொய்யாக காவல் நிலையத்தில் புகார் அளித்து, அதற்கு ஆதரவாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.